**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 61/2021 |
| வழக்கு சாட்சி | : | PW11 |
| நாள் | : | 12.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கங்காதரன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | சுப்பிரமணியம் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**1 முதல் 3, 6 எதிரிகள் ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 4, 5 எதிரிகள் ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u> :

நான் தற்போது காஞ்சிபுரம் மாவட்ட குற்ற பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வெள்ளவேடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வந்தேன். எனக்கு முன்பு வெள்ளவேடு காவல் நிலையத்தில் பணியாற்றிய காவல் ஆய்வாளர்கள் திரு.துரைபாண்டியன், திரு.மோகன், திரு.சிவபாதசேகரன் ஆகியோர் குற்ற எண்.403/2012 இதச 147, 148, 341, 324, 307 பிரிவு கீழ் வழக்கு பதிவு செய்து வழக்கின் புலன் விசாரணை மேற்கொண்டார்கள். அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை காவல் ஆய்வாளர் திரு.துரைபாண்டியன் பதிவு செய்தார் அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.4** ஆகும். காவல் ஆய்வாளர் திரு.துரைபாண்டியன் இவ்விசாரணையில் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் மாணிக்கராஜ் மற்றும் வைரமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும வரைப்படம் தயார் செய்தார். அந்த மாதிரி வரைப்படம் **அ.த.சா.ஆ.5** ஆகும். சாட்சிகள் மாணிக்கராஜ் மற்றும் வைரமுத்து ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் சாட்சிகள் ஆனந்த் மற்றும் வைரமுத்து ஆகியோர் முன்னிலையில்

மருத்துவமனையில் இருந்த தங்கசாமி என்பவரின் உடல் மீது அவர் மனைவி எடுத்து கொடுத்த சந்தன கலர் அரை கை சட்டையில் ரத்த கறைபடிந்துள்ளது. அதனை மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.6** ஆகும். **சா.பொ.1** ஆகும். சாட்சிகள் ஆனந்தன், வைரமுத்து ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலங்களை பதிவு செய்தார். சாட்சிகள் மணிகன்டன், ரசிகாமணி, துரைராஜ், சுரேஷ், சுகுமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் அடிப்பட்ட நபர் தங்கசாமிநாடார் என்பவர் சிகிச்சை பலன் இல்லாமல் 17.08.2012 அன்று ராமசந்திர மருத்துவமனையில் இறந்துவிட்டமையால் இவ்வழக்கினை காவல் ஆய்வாளர் கொலை வழக்காக 147, 148, 341, 324, 302 r/w 120பி இதச பிரிவு கீழ்ஆக பிரிவு மாற்றம் செய்தார். அந்த பிரிவு மாற்ற அறிக்கை **அ.த.சா.ஆ.7** ஆகும். இறந்த தங்கசாமிநாடார் உடல் மீது பிரேத பரிசோதனை 17.08.2012 மாலை 7.30 மணி முதல் 9.00 வரை சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டார். அந்த பிரேத விசாரணை **அ.த.சா.ஆ.8** ஆகும். எதிரி சுரேஷ் என்பவர் 16.08.2012 அன்று, காலை 7.30 மணிக்கு கைது செய்தும் எதிரியிடமிருந்து TN 20 BM 2569 Blue pulsor, சாட்சிகள் தர்மன், சத்யா ஆகியோர் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுத் மகஜர் **அ.த.சா.ஆ.9** ஆகும். எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.10** ஆகும். எதிரி தானாக கொடுத்த சுமார் 3 1/2அடி நீளமுள்ள இரும்பு ராடு ஒன்று மகஜரில் கைப்பற்றினார். **சா.பொ.2** ஆகும். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.11** ஆகும். சாட்சிகள் இருவரிடம் தனித்தனியே வாக்குமூலங்களை பதிவு செய்தார். எதிரிகள் ஐசக், மற்றும் ராஜேஷ் ஆகியோர்களை 18.08.2012 எதிரிகளை காலை 9.00 மணிக்கு கைது செய்தும் எதிரி ஐசக் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகள் ரவிசந்திரன், கார்த்திக் முன்னிலையில் பதிவு செய்தார். அந்த ஒப்புதல்

வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.12** ஆகும். மேலும் அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி ராஜேஷ் என்பவர் தானாக எடுத்து கொடுத்த இரும்பு பைப் நீளம் 24 செ.மி. 3/4 அகலம் கொண்ட மகஜரில் கைப்பற்றியும், பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் பதிவு எண் இல்லாத நீல நிற Honda Unicon இரு சக்கர வாகனத்தை கைப்பற்றினார். **சா.பொ.3** ஆகும். அந்த இரண்டு கைப்பற்றுதல் மகஜர்கள் **அ.த.சா.ஆ.13 மற்றும் அ.த.சா.ஆ.14** ஆகும். மகஜர் சாட்சிகள் ரவிசந்திரன், கார்த்திக் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தார். எதிரி ராஜேஷ் என்பவரை அதே தேதியில் அதே சாட்சிகள் முன்னிலையில் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.15** ஆகும். மேலும் அதே சாட்சிகள் முன்னிலையில் அவர்கள் எடுத்த ஆஜர் செய்த இரும்பு கலாய் பைப் ஒன்றினை மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.16** ஆகும். **சா.பொ.4** ஆகும். மேலும் கைப்பற்றிய வழக்கின் சொத்துக்கள் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். அந்த படிவம்-91, 1 முதல் 5 வரிசை உள்ளது. **அ.த.சா.ஆ.17** ஆகும். மேலும், 17.09.2012ந்தேதி எதிரி கார்த்திக் என்கிற குள்ளகார்த்திக் நீதிமன்றத்தில் சரண்டர் ஆனதை நீதிமன்ற காவலில் விசாரணைக்கு எடுத்தும் சாட்சிகள் ரஜினி, பாபு ஆகியோர் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.18** ஆகும். அதன் பிறகு காவல் ஆய்வாளர் துரைபாண்டியன் பணிமாறுதல் சென்றதால் திரு.பி.மோகன் காவல் ஆய்வாளர் இவ்வழக்கினை புலன் விசாரணை மேற்கொண்டார். 07.11.2012 அன்று எதிரி முருகன் என்பவர் சாட்சிகள் வெங்கடபதி, ராமசந்திரன் ஆகியோர் முன்னிலையில் எதிரி கைது செய்து, எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.19** ஆகும். அன்று இரவு அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி

எடுத்து ஆஜர் செய்த சவுக்கு உருட்டு கட்டை சுமார் 2அடி நீளம் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.20** ஆகும். **சா.பொ.5** ஆகும். மேலும், மகஜர் சாட்சிகள் வெங்கடபதி, ராமசந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். அதன் பிறகு ஆய்வாளர் பணிமாறுதல் செய்தபடியால் காவல் ஆய்வாளர் சிவபாதசேகரன் என்பவர் இவ்வழக்கின் புலன்விசாரணை மேற்கொண்டார். தங்கசாமிநாடாருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த மருத்துவர் ராஜ்குமார் இறந்துபோன தங்கசாமி பிரேதத்தை பினகூர்ஆய்வு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை கொடுக்க மருத்துவர் ஸ்ரீனிவாசலு மற்றும் மருத்துவர் சந்தோஷ் என்ற சம்பத்குமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும், பிரேதத்தின் மாதிரிகளை பகுப்பாய்வு செய்த மருத்துவர் சுப்புலட்சுமி, தடஅறிவியல், பாகுபாய்வு ஆய்வு அறிக்கை கொடுத்த மருத்துவர் ஜெயந்திசந்திரசேகரன் மற்றும் உமாதேவி ஆகியோர்கள் வழங்கிய அறிக்கை கொடுத்தார்கள். அந்த அறிக்கை முறையே **அ.த.சா.ஆ.21 முதல் அ.த.சா.ஆ.23** ஆகும். சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். திரு.சிவபாதசேகரன் காவல் ஆய்வாளர் பணிமாறுதல் சென்றுவிட்டபடியால் நான் வெள்ளவேடு காவல் ஆய்வாளராக பொறுப்பு ஏற்ற பின்பு இவ்வழக்கினை புலன் விசாரணை செய்தும் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டும், ஏற்கனவே மாதிரி வரைப்படத்தில் சொல்லப்பட்டுள்ளது போல இருந்ததால் நான் மாதிரி வரைப்படம் தயார் செய்யவில்லை. சாட்சிகள் மற்றும் வாக்குமூலம போதுமானதாக இருந்ததால் நான் மீண்டும் வாக்குமூலங்களை பதிவு செய்யவில்லை. அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து அனைத்து விசாரணை முடித்து இவ்வழக்கின் விசாரணையிலிருந்து வழக்கின் வாக்குமூலங்களின் இருந்தும் சம்பவ இட சாட்சிகளிலிருந்தும், கண்ணுற்ற சாட்சிகள் மூலமும் இச்சம்பவம் உண்மையன தெரியவந்ததால் விசாரணை முடித்து சட்ட கருத்துரை பெற வேண்டி குற்றதுறை துணை இயக்குநர் காஞ்சிபுரம் அவர்களிடம் கருத்துறை பெற்று

எதிரிகள் ஐசக், சுரேஷ், ராஜேஷ், சந்துரு, முருகன், கார்த்திக் ஆகியோர்கள் மீது 16.10.2014 அன்று குற்ற பத்திரிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் புகார் அ.சா.1–ல் கொடுக்கப்படவில்லை என்றாலும் நாங்களே புகார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முக்கியான சாட்சிகளை இந்த வழக்கில் விசாரித்தால் வழக்கு பொய்த்துவிடும் என்பதால் அவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு ஆஜர் எதிரிகளுக்கு எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நாங்களே யூகித்துகொண்டு சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல எதிரிகள் எந்த வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் எந்த வித சான்று பொருள் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் நான் சொன்ன நேரத்தில், தேதியில், சொன்ன விதத்திலும் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.